Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 183

வியாழக்கிழமை
28 மே 2026

வைகாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## பலாலி கிழக்கை விடுவிக்க இராணுவம் முட்டுக்கட்டை!

### விமான நிலையத்துக்குத் தேவையாம்

**யாழ்ப்பாணம், மே 28**

**பலாலி கிழக்குப் பகுதியை விடுவிப்பதற்குச் சாத்தியம் இல்லை என்று இராணுவத்தினரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.** »11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## விஞ்ஞானபீட பீடாதிபதியாக கலாநிதி தபோதரன் தெரிவு



யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதிபதியாக கணினி விஞ்ஞானத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கதிரவேலு தபோதரன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். »11

காணி விடுவிப்பு விடயத்தில்

## பொய்களை விதைப்பதற்கே முயற்சிக்கின்றார் அமைச்சர்

### கஜேந்திரகுமார் எம்.பி. கடும் காட்டம்

யாழ்ப்பாணம், மே 28
காணி விடுவிப்புத் தொடர்பில் மக்கள் மத்தியில் பொய்களை விதைக்கும் வகையிலேயே அமைச்சர் சந்திரசேகர் செயற்படுகின்றார்- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
வடமாகாண ஆளுநர் அலு »11

**மாகாணசபைத் தேர்தலுக்கு நிதிப்பிரச்சினை இல்லையாம்**

விரிவு பக்கம்:-04

## சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்குக் கடூழியம்

கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றம் 12 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது. கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் »11

## ரணில் வரார்!



கொழும்பு, மே 28
ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். எனவே, அவர் மீண்டும் செயற்பாட்டு அரசியலுக்கு வரமாட்டார் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க »11

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற

## நீதிபதி அலெக்ஸ்ராஜா நேற்றுத் திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜாவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, உடன் அமுலுக்கு வரும்வகையில் அவர் பதுளைக்கு மாற்றப்பட்டுள்ளார். »11

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் 10 ஆண்டுகளில் ஒரு இலட்சம்!**

விரிவு பக்கம்:-02

## பச்சிளம் சிசு சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மே 28
பால்குடித்துவிட்டு உறங்கிய இரண்டு மாதப் பெண் சிசு சடலமாக மீட்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் நகரப்பகுதியைச் சேர்ந்த விதுசன் சாஜீசா என்ற சிசுவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 12 மணியளவில் பால் குடித்துவிட்டு »11



## யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதியாக சதீஸ்தரன்!



விரிவு பக்கம்:-11

போக்குவரத்து விதிமீறல்

## 40 மோட்டார்சைக்கிள்களை கைப்பற்றினர் பொலிஸார்!

கிளிநொச்சி, மே 28
போக்குவரத்து விதிமீறல்களில் தொடர்புடைய நடவடிக்கைகளில், 40க்கும் மேற்பட்ட மோட்டார்சைக்கிள்கள் கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்ட »11

**இந்தியாவை குளிர்வித்து தப்பிக்கிறது அரசாங்கம்!**

விமல் குற்றச்சாட்டு

விரிவு பக்கம்:-09

காணாமற்போயிருந்த

## குருநகர் மீனவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மே 28
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்காக கடந்த திங்கட்கிழமை சென்ற மீனவர் காணாமற் போயிருந்த நிலையில், அந்த மீனவர் நேற்று புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »11



“உவங்கள் துலைவார் தெக்குத்தான் முட்டுக்கட்டை போடாமல் இருந்தவங்கள்?”

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 27.05.2026 | திகதி 27.05.2026 | திகதி 27.05.2026 | திகதி 27.05.2026 | திகதி 27.05.2026 | திகதி 27.05.2026 | திகதி 27.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4444 | சீட்டிழுப்பு இலக்கம் 1511 | சீட்டிழுப்பு இலக்கம் 0470 | சீட்டிழுப்பு இலக்கம் 2550 | சீட்டிழுப்பு இலக்கம் 6202 | சீட்டிழுப்பு இலக்கம் 2232 | சீட்டிழுப்பு இலக்கம் 0318 |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் தனுஷம் | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து W | ஆங்கில எழுத்து R | ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் தனுஷம் |
| வெற்றி இலக்கங்கள் 10 16 47 63 | வெற்றி இலக்கங்கள் 05 21 25 48 | வெற்றி இலக்கங்கள் 7 4 8 4 | சுப்பர் இலக்கம் 11 | வெற்றி இலக்கங்கள் 5 9 3 3 5 3 | வெற்றி இலக்கங்கள் 09 14 28 34 | வெற்றி இலக்கங்கள் 46 55 56 |
| விசே எழுத்து N | | | வெற்றி இலக்கங்கள் 16 34 60 74 | | விசேட எழுத்து N | |

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் 10 ஆண்டுகளில் ஒரு இலட்சம்!

கொழும்பு, மே28

**கடந்த 10 ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம் இலங்கையின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பொலிஸாரின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்று மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கலாசாரமும் ஆன்மிக விழுமியங்களும் நிறைந்த ஒரு நாட்டில் இத்தகைய புள்ளிவிவரம் பதிவாவது ஒட்டுமொத்த சமுதாயமும் வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

நாட்டில் ஆண்டுதோறும் சராசரியாக 10,000 க்கும் மேற்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இடம் பெற்று வருகின்றன.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகும் சிறுவர்களில் முன்பள்ளி மற்றும் பாடசாலைச் சிறுவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலான சம்பவங்களில் துஷ்பிரயோகத்தை மேற்கொள்பவர்கள் அந்நியர்கள் அல்ல; மாறாகப் பாடசாலை ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், குடும்பத்தின் நெருங்கிய நண்பர்கள் மற்றும் பெற்றோரின் உறவினர்களேயாவர். சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டிய அரச ம்ற்றும் தனியார் காப்பகங்கள், நன்னடத்தை இல்லங்கள், சமயத் தலங்கள் மற்றும் சட்டவிரோதமாகச் சிறுவர்கள் வீட்டுப் பணிப் பெண்களாக அல்லது யாசகம் எடுக்கும் தொழிலில் ஈடுபடுத்தப்படும் இடங்களிலேயே இத்தகைய கொடுமைகள் அதிகம் நடக்கின்றன. இந்த விவகாரத்தில் வெறும் மேலோட்டமான கருத்துக்களைத் தாண்டி சமூக ரீதியாகப் பாரிய விழிப்புணர்வும், அணுகுமுறை மாற்றங்களும் அவசியமாகும். பெற்றோர், குடும்பப் பின்னணி, பாடசாலை மற்றும் சமூகம் என அனைத்துத் தரப்பினருக்கும் இதில் சமமான பொறுப்பு உள்ளது.

தற்போதைய சட்டக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தி, குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நீதித்துறையும், பாதுகாப்புத்துறையும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும்- என்றார். (ச-இ)

## குஷ் போதையுடன் இளைஞர் கைது

கொழும்பு, மே 28

குஷ் ரக போதைப்பொருளை பெருமளவில் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து இலங்கை வந்தடைந்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபரின் பயணப்பொதியைச் சோதனையிட்ட போது 8.365 கிலோகிராம் எடையுடைய 'குஷ்' போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கைப்பற்றப்பட்ட இந்தப் போதைப்பொருள்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 80 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்; சம்பள உயர்வு!

தாய் சேய் நலனைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் பணிகளை எளிதாக்குவதற்காக, எதிர்காலத்தில் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படும். அத்துடன், எதிர்வரும் ஜனவரி மாதத்தில் அவர்களுக்கான உரிய சம்பள உயர்வை வழங்குவதற்கும் அரசாங்கம் கொள்கை ரீதியில் நடவடிக்கை எடுத்துள்ளது என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொருளாதார நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்டிருந்த அரச ஊழியர்களுக்கான சலுகைகள் மற்றும் களப்பணி வாகனங்களை வழங்கும் திட்டங்களை நாம் மீண்டும் ஆரம்பித்துள்ளோம். தேசிய சுகாதார அறிவியல் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் நாடு முழுவதுமுள்ள 11 மையங்களில் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. தாய் மற்றும் சேய் சுகாதார மேம்பாடு, சுகாதாரக் கல்வியை வழங்குதல் மற்றும் குடும்ப சுகாதார ஊழியர்களின் களப்பணிகளைக் கண்காணித்தல் உள்ளிட்ட பொறுப்புகள் குறித்து இதன்போது பயிற்சியளிக்கப்பட்டுள்ளன. இம்முறை உலக சுகாதார மாநாட்டில் இலங்கையின் இலவச சுகாதார சேவைக்கு விசேட அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பெருமையில் பெரும் பங்கு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பால் கிடைத்ததாகும் - என்றார். (ச-இ)

## ராஜித சேனாரத்னவின் பயணத்தடை தளர்வு

கொழும்பு, மே 28

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத்தடையைத் தற்காலிகமாக தளர்த்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ராஜித சேனாரத்னவின் சட்டத்தரணிகளினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் அழைக்கப்பட்டபோது தனது கட்சிக்காரர் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதாக அவரது சட்டத்தரணி குறிப்பிட்டார். அதற்கமைய தற்போது விதிக்கப்பட் டுள்ள வெளிநாட்டுப் பயணத்தடையை எதிர்வரும் ஜீன் மாதம் 2 ஆம் திகதி வரை தற்காலிகமாக தளர்த்துமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதவான் உத்தரவிட்டார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0910 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 0 6 2 4 3 6 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3176 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 36 52 55 77 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 20 24 31 33 |
| வெற்றி வாரம் | 5337 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 1006 |
| வெற்றி இலக்கம் | 04 17 45 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| | துலாம் |
| வெற்றி இலக்கம் | 02 38 41 49 |
| சீட்டிழுப்பு வாரம் | 4888 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| சுப்பர் இலக்கம் | 23 |
| வெற்றி இலக்கம் | 06 21 44 61 |
| வெற்றி வாரம் | 2352 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 27.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 10 50 63 69 |
| வெற்றி வாரம் | 3002 |

## பொருளாதார மறுமலர்ச்சிக்கு கைகொடுக்கும் பாகிஸ்தான்!

கொழும்பு, மே 28

இலங்கையின் தற்போதைய பொருளாதார மறுமலர்ச்சி நடவடிக்கைகளுக்கு எவ்வித நிபந்தனைகளுமின்றி முழுமையான தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் உதவிகளை வழங்கத் தயாராக உள்ளோம் என்று இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் கலாநிதி நய்யார் நசீர் தெரிவித்துள்ளார்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்தவுடன் இடம்பெற்ற இருதரப்பு விசேட சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானைப் போன்றே இலங்கையும் ஒரு பிரதான விவசாய நாடாகும் என்பதால், இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் உதவிகளைப் பரிமாறிக்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் மிக அதிகமாகவுள்ளன. இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்த அந்தத் தொழில்நுட்ப அறிவை வழங்க நாம் தயாராக இருக்கிறோம்.

அத்துடன் இலங்கையின் மண் மற்றும் காலநிலைக்கேற்ற பாஸ்மதி அரிசி வகைகளை இங்கு உருவாக்குவதற்கு எமது விஞ்ஞானிகள் உதவிகளை வழங்குவர். பாகிஸ்தானிலும் போதிய நீர் வளம் இருந்தபோதிலும், அதனை முறையாக விநியோகிப்பதில் நிலவும் சிக்கல்கள் சவால்களைக் கையாள்வதில் இரு நாடுகளும் இணைந்து செயற்படலாம் என்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீழ்ச்சிப் பாதையில் ஏற்றுமதித்துறைகள்

## கைத்தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 28**

**மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகள் மற்றும் மோதல்கள் காரணமாக இலங்கையின் பிரதான ஏற்றுமதித்துறைகள் வீழ்ச்சியைக் கண்டுள்ளன. எனினும் மாற்றுத்துறைகளின் பாரியளவிலான வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்துக்கு புதிய நம்பிக்கை அளித்துள்ளது என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை பிரதி அமைச்சர் சத்துரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய ரீதியில் நிலவி வரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இலங்கையின் பாரம்பரியமற்ற ஏற்றுமதித்துறைகள் கடந்த 2025ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் வியக்கத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. ஆரம்பத்தில் 10 சதவீத ஒட்டுமொத்த வளர்ச்சியை இலக்காகக் கொண்டிருந்தபோதிலும், தற்போதைய உலகளாவிய நெருக்கடிக்கு மத்தியில் 7 சதவீதத்துக்கு அதிகமான பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்ள வலுவான தலையீடுகளும் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதித்துறையை வெறும் தேயிலை ஆடைத்தொழிலோடு மட்டுப்படுத்தாமல் அதனைத் தாண்டியும் புதிய துறைகள் ஊடாக ஏற்றுமதியை பன்முகப்படுத்துவதே முதன்மை நோக்கமாகும் - என்றார். (ச-இ)

# இரட்டைக் கொலை சந்தேகநபர் ஓட்டம்

## பொலிஸார் மீண்டும் தேடுதல்

கொழும்பு, மே 28

ஹற்றன், டிக்கோயா நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு வயோதிபத் தம்பதியினர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் நேற்றுச் சிறை அதிகாரிகளின் பாதுகாப்பில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். கடந்த வியாழக்கிழமை இந்தக் கொலைச் சம்பவம் நடந்திருந்த நிலையில், கடந்த சனிக்கிழமை சந்தேகநபர் பொகவந்தலாவையில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சந்தேகநபருக்கு சிறையில் திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டதை அடுத்து, அவர் சிறை அதிகாரிகளால் கண்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த சந்தேகநபர் நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற சந்தேகநபரைக் கைதுசெய்யப் பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (எ-இ)

# சிறுமிக்கு நீதி கோரி பெண்கள் போராட்டம்


மட்டக்களப்பு, மே 28

அநுராதபுரத்தில் பௌத்த பிக்குவால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சிறுமிக்கு நீதி வழங்கக்கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்றுக் காலை பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் 300க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு விரைவாக நீதி கிடைக்கவேண்டும் என்பதுடன், குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள பிக்குவுக்கு எதிராக சட்டம் பாகுபாடின்றி நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். இந்தச் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவர்கள், உரிய அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் வலியுறுத்தினார்கள். (எ-இ-20-60)

# வெசாக் வாரம் ஆரம்பம்

மாத்தறை, மே 28

தேசிய வெசாக் வாரம் நேற்று ஆரம்பமானது. 'பொது நன்மைகளுக்காக நாம் விரைவாக அணிதிரள்வோம்' என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு வெசாக் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பங்களிப்புடன் மாத்தறை, திஹகொடவில் உள்ள மிடெல்லவெல புராண விகாரையில் தேசிய வெசாக் விழா நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. (எ-இ)





# கபில சந்திரசேன வழக்கு அமெரிக்காவிடம் உதவி

கொழும்பு, மே 28

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் கைபேசியைத் திறந்து, அதிலுள்ள விவரங்களை ஆராய்வதற்காக அமெரிக்காவின் பிரதான புலனாய்வு அமைப்பான பெடரல் விசாரணைப் பணியகத்தின் உதவியை நாடியுள்ளதாகக் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு [illegible] நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவித்தது. அந்த அமைப்புக்கு இதுகுறித்து மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைய, அவர்களிடமிருந்து கிடைக்கும் ஆலோசனைகளைத் தொடர்ந்து கைபேசி தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள் [illegible]




# அரிது அரிது....!

'அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது' எண்டு படிச்ச ஔவையார், இப்ப இருந்திருந்தால் 'அரிது அரிது கீரிச்சம்பா கிடைப்பது அரிது' எண்டு தான் படிச்சிருப்பா. அந்தளவுக்கு இப்ப கீரிச்சம்பா எண்டதையே கண்ணால காணேலாமல் இருக்குது. ஆனால் ஒவ்வொரு வருசமும் எல்லா இடமும் கீரிச்சம்பாவை விளைவிச்சு, அரிவி வெட்டி, மூடை மூடையா லொறியளில ஏத்திக்கொண்டு போகினம். கீரிச்சம்பா போட்டால் நல்ல லாபம் கிடைக்கும் எண்டு இப்ப அஞ்சாறு வருசமா மற்ற நெல்லினங்களை விட்டிட்டு எல்லாரும் கீரிச்சம்பாச் செய்கைக்கு மாறிட்டினம். அப்பிடியிருந்தும் ஏன் கீரிச்சம்பா காணாமல்போனோர் பட்டியலில போட்டுது எண்டு ஒருத்தருக்கும் விளங்கேலை. எண்டாலும் சில கடையளில கள்ளமா கீரிச்சம்பா விக்கினம். அரசாங்கம் கீரிச்சம்பாவை 260 ரூபாவுக்கு கூட விக்கேலாது எண்டு சட்டம் போட்ட பிறகுதான், இப்பிடியொரு நிலைமை.

'எங்கப்பன் குதிருக்குள்ள இல்லை' எண்டு சொல்லிக் காட்டிக்குடுத்த மாதிரி, வடக்கில இருக்கிற கடைக்காரரும் 'கீரிச்சம்பா எங்கட கடையில இல்லை' எண்டு ஒருமார்க்கமாகச் சொல்லி, மறைமுகமா 'கூட விலைக்குத்தான் இருக்கு' எண்டு சிக்னல் குடுக்கினம். அதுவும் தெரிஞ்ச முகங்கள் வந்தால் உடனேயே கடையின்ர பின்னுக்கு இருக்கிற இன்னொரு 'ஸ்டோர்' ரூமுக்குள்ள இருந்து கீரிச்சம்பா அரிசிப்பையை ஏதோ கள்ளக்கடத்தல் சாமான் மாதிரி சத்தமில்லாமல் கொண்டந்து குடுக்கினம். ஆரும் தெரியாதவை போய் கீரிச்சம்பாவைக் கேட்டால் 'ஐயோ அண்ணை கொம்பனிக்காரன் வந்தே ஆறுமாதம் ஆகிட்டு. இப்ப எங்கட வீட்டில கூட கீரிச்சம்பாவை விட்டிட்டு பொன்னிக்கு மாறிட்டம். வேணுமெண்டால் பொன்னி அரிசி தரட்டுமோ?' எண்டு பிலாக்கணம் பாடுகினம்.

இதில இருக்கிற ஆகப்பெரிய பகிடி என்னவெண்டால், 5 கிலோ கீரிச்சம்பா அரிசிப்பையில விலை 1300 ரூபா எண்டுதான் அச்சடிச்சு இருக்கு. ஆனா கடைக்காரர் தங்களுக்குத் தெரிஞ்சவைக்குக் களவாக் குடுக்கிற விலை 1900 ரூபாவா. ஒரு பையிலயே 600 ரூபா பொல்லால அடிச்ச காசு அவையின்ர பொக்கற்றுக்க வந்திடும். இப்பிடி இருந்த இடத்தில உழைச்சு ருசி கண்டவை கீரிச்சம்பாவை பவுண்மாதிரி வெளியில காட்டாமல் பொத்திப்பொத்தி தானே வைச்சிருப்பினம். 'ஏனன்னை இப்பிடிக் கண்ணைப்பொத்தி அடிக்கிற மாதிரி அறாவிலை சொல்லுறியள்?' எண்டு ஆரும் கேட்டால், 'அப்ப உங்களுக்கு அரசாங்கம் போட்ட ரேட்டுக்குத்தான் கீரிச்சம்பா வேணும் எண்டால் வேற கடையில வாங்குங்கோ' எண்டு திமிராச் சொல்லுகினம்.

உண்மையில கீரிச்சம்பாவுக்கு வந்த தட்டுப்பாடு தானா வரேலை. இது 'அரிசி மாபியாக்கள்' திட்டமிட்டு உருவாக்கின ஒரு செயற்கைத் தட்டுப்பாடு. அரிசியை உள்ளுக்குள்ள பதுக்கி வைச்சுட்டு, சனத்தை அலைய விட்டு, பிறகு தங்களுக்கு வேண்டிய விலையில வித்து காசை அள்ளுகினம். அரசாங்கம் என்னவெண்டால், இதெல்லாம் தெரியாத மாதிரி 'மௌன விரதம்' இருக்கு. இப்பிடியான மாபியாக்களை இப்பவே அடக்காட்டி, அவையள் இன்னும் செழிப்பா வளர்ந்து சனத்தின்ர வயித்துல தான் அடிப்பாங்கள். நுகர்வோர் விவகார அதிகாரசபை எண்டு ஒரு சபை இருக்குதானே? அவையள் கூட இதுகளைக் கண்டும் காணாமல் இருக்கினமோ? சனத்துக்குப் 'பில்லும்' குடுக்காம, விலையையும் ஏத்தி விக்கிற இந்த முதலாளி மாருக்கு ஒரு 'ஆப்பு' வைக்கிற வரைக்கும் கீரிச்சம்பா அரிசி வெறும் கனவாத்தான் இருக்கும் போலக் கிடக்கு. அதிகாரிகள் விழிச்சுக்கொள்ளுங்கோ. இல்லாட்டி சனம் கஞ்சிக்குக்கூட வழியில்லாம நிக்க வேண்டியதுதான் கண்டியளோ!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபைத் தேர்தலுக்கு நிதிப் பிரச்சினை இல்லை!



## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு,மே 28

**மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அதற்குரிய நிதி ஒதுக்கீடும் உள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல்திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, மாகாணசபைத் தேர்தலை இந்த வருடம் நடத்தமுடியாது எனவும், டித்வா பேரிட்ரால் நிதி செலவளிக்கப்பட்டுள்ளது எனவும் ஜே.வி.பி.யின் செயலாளர் தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் , மாகாணசபைத் தேர்தலை வெகு விரைவில் நடத்தவேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். ஏனெனில் 8 மாதங்களுக்குள் இரு தேர்தல்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு நாம் பொதுத்தேர்தலை நடத்தினோம். கடந்த காலங்களில் இழுத்தடிக்கப்பட்டுவந்த உள்ளாட்சிசபைத் தேர்தலும் நடத்தப்பட்டது. எனவே, அரசமைப்பின் பிரகாரம் மக்களின் வாக்குரிமை, ஜனநாயக உரிமை மற்றும் இறைமை என்பவற்றை நாம் மதிக்கின்றோம். இதற்கமைய மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்படும். நிதிப்பிரச்சினை இல்லை. உரிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாகாணசபைத்தேர்தலைவிரைவில் நடத்துவது எமது எதிர்பார்ப்பாக இருந்தாலும், சட்டப் பிரச்சினை உள்ளது. நாடாளுமன்றம் உரிய வகையில் சட்டத்திருத்தத்தை செய்து தந்தால் தேர்தலை நடத்தக்கூடியதாக இருக்கும்- என்றார். (ச-இ)

# மக்கள் ஆணைக்கு துரோகமிழைக்கோம்

## அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு,மே 28

மக்கள் ஆணைக்கு எதிராகச் செயற்படமாட்டோம் என்றும் எதிரணி உறுப்பினர்களை அரசாங்கத்துடன் இணைத்துக்கொள்ளும் எந்தவொரு திட்டமும் இல்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதியதொரு அரசியல் கலாசாரத்துக்காகவே மக்கள் எமக்கு வாக்களித்தனர். சிலருக்கு விருப்பம் இருக்கலாம். ஆனால் எதிரணி உறுப்பினர்களை அரசாங்கத்துடன் இணைக்கும் திட்டம் எமக்கு இல்லை. மக்கள் ஆணைக்கு புறம்பாக கட்சி தாவும் உறுப்பினர்களின் எம்.பி.பதவியை இரத்துச் செய்யும் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். வங்குரோத்து அரசியல்வாதிகள் திட்டமிட்ட அடிப்படையில் வாதந்திகளைப் பரப்பிவருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

### விஜித ஹேரத்துக்கு பாரம்பரிய வரவேற்பு

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நியூசிலாந்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், அந்த நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் வர்த்தக அமைச்சின் வளாகத்தில் பாரம்பரிய வரவேற்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பாரம்பரிய வரவேற்பு நிகழ்வின் மூலம் கௌரவிக்கப்பட்டதை பெரும்பேறாகக் கருதுவதாக அமைச்சர் அவரது எக்ஸ்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 3 ஆம் திகதி வரை அமைச்சர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். (எ-இ)


## மரண அறிவித்தல்



### செல்வி நாராயணமூர்த்தி தாட்சாயினி

கோப்பாய் மத்தி, முத்துமாரி கோவிலடியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்வி நாராயணமூர்த்தி தாட்சாயினி அவர்கள் கடந்த (26.05.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் புத்தூரை சேர்ந்த காலஞ்சென்றவர்களான தி.சுப்பிரமணியம், சு.தெய்வானைபிள்ளை, கோப்பாயை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சி.சிற்றம்பலம், சி.சிவபாக்கியம் ஆகியோரின் பேர்த்தியும், சு.நாராயணமூர்த்தி (ஓய்வூதியர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) - ந.சாந்தநாயகி தம்பதியரின் புதல்வியும், ந.காந்தரூபன் (யாழ் பல்கலைக்கழக நூலக அலுவலர்) அவர்களின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தில்லைஅம்பலவாணர், சு.தில்லைசிவலோகநாதன், சு.பரமேஸ்வரன் ஆகியோரின் பெறாமகளும், சி.நல்லைநாதன், சி.செந்தில்நாதன், சி.அச்சுதானந்தன் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.05.2026) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 985 3750**

(CR/47607) J-1



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10.01.1946



உதிர்வு 09.06.2025

### தவமணி திருவம்பலம்

திதி: பூர்வபக்கம் வைகாசி திரயோதசி

வருடம் ஒன்று சென்றாலும் - அகலவில்லை
எங்கள் துயரம். உள்ளம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய் கொல்கின்றது
குடும்பத்தின் பாசவிளக்காய் அனைவருடனும்
கலகலப்பாக பேசி ஈகை செய்வீர்கள்
உங்கள் சிரித்த முகம் கண்களில் - தொடர்ச்சியாக
தோன்றிய வண்ணம் இருக்கின்றது.
இவ்வளவு விரைவாக எங்களை விட்டு பிரிவீர்கள்
என்று கனப்பொழுதும் கூட நாங்கள் நினைக்க வில்லை.
உங்கள் அன்பும்,பாசமும் என்றும் அகலாது
எங்களுடன் இருக்கும்.
எம் இதயத்தின் அமைதியான ஓரத்தில் -என்றும்
நீங்கள் எம்முடன் வாழ்ந்துகொண்டே இருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா அமைதியுற்று சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.**

*பிரிவால் துயருறும்*
**குடும்பத்தினர்.**

(CR/47608) A


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## ஏன் இந்தப் புறக்கணிப்பு..?

**வ**டமாகாணத்தில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்திலும், அதன் தொடர்ச்சியாக பலாலியிலும் நேற்றுமுன்தினம் இரு வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த பல தசாப்தங்களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலி.வடக்கு வாழ் மக்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், வடக்கின் இதர பகுதிகளிலும் இத்தகைய போராட்டங்கள் தொடர்கதையாகவே உள்ளன. இவ்வாறான பின்னணியில்தான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், இராணுவப் பிரதானிகளின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

எனினும், இந்தக் கலந்துரையாடல்கள் முறைப்படி இற்றைப்படுத்தப்பட்டனவா? உரிய தரப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுத்தான் ஆலோசனைகள் இடம் பெற்றனவா? முறையான விவாதங்கள் மேற்கொள் ளப்பட்டனவா? என்று கேட்டால், 'இல்லை' என்பதே அனைத்துக்குமான ஒற்றைப் பதிலாக அமையும். தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாமல், அரச அதிகாரிகளையும் ஆளும்கட்சியின் சில உறுப்பினர்களையும் வைத்தே இந்தக் கலந்துரையாடல்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. காணி விடுவிப்பு என்பது தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் திரும்பத் திரும்பக் கதைத்துவரும் விடயம். எனவே, இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் புறந்தள்ள வேண்டிய தேவை என்ன? என்பது நிச்சயம் ஆராயப்படவேண்டியதே.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச அதிகாரிகளை விடவும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை விடவும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் தெளிவான அறிவுள்ளவர்கள். எனவே, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அவர்களைப் புறமொதுக்கிவிட்டு காணி விடுவிப்பு சார்ந்த நகர்வுகளை மேற்கொள்வது தவறு மட்டுமல்ல குற்றமுமாகும். யாழ்ப்பாணத்தில் கணிசமான காணிகள் விடுவிக்கப்படாத பகுதியாக வலிகாமம் வடக்கே உள்ளது. அங்கு துரித விடுவிப்பு அவசியப்படும் பகுதிகள் தொடர்பான பட்டறிவு வலி.வடக்குத் தவிசாளருக்கே இருக்கும். எனவே, அத்தகையவர்களைப் புறக்கணித்துவிட்டு இந்த விடயங்களை ஆராய்வதன்மூலம் திசைகாட்டி அரசாங்கம் என்ன நன்மையை அடைந்துவிடப் போகின்றது? வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் புறக்கணித்துவிட்டு இதற்கு முன்னரும் சில விடயங்கள் இடம்பெற்றன. இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருந்தார். அவ்வாறிருந்தும், மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் புறக்கணித்துவிட்டு தமிழர்களின் பிரச்சினைகளை அணுகுவதன்மூலம் அரசு கூறவரும் செய்திதான் என்ன?

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் அரச அதிகாரிகள் தமது தரப்புக் கோரிக்கையை முன்வைத்த போதிலும், இராணுவத்தை எதிர்த்துப்பேசி காரியத்தைச் சாதிக்க அவர்களால் முடியவில்லை. எவ்வித எதிர்ப்பையும் வெளிப்படுத்தாமல், இராணுவம் கூறுவதைக் கேட்பதையே காணிவிடுவிப்புக் கலந்துரையாடலில் அவர்கள் தமது கடமையாகக் கொண்டிருந்தனர். இவ்வாறாக, எதிர்ப்பே இல்லாமல் நகர்வதற்காகவா அரசாங்கம் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் புறக்கணிக்கின்றது என்றும் எண்ண வேண்டியுள்ளது. எனவே, தமிழர்களின் விவகாரங்களை அணுகும்போது, தமிழ்த்தேசியக் கட்சிகளை இணைத்துச் செயற்பட திசைகாட்டி அரசாங்கம் முன்வரவேண்டும். அதுவே சரியானது - முறையானது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







### பொய்யாமொழி

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

**பொருள்:** ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.



## நெல் கொள்வனவு சபைக்கு நெல் விற்பனைக்கு அனுமதி



கொழும்பு, மே 28

**நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் உள்ள நெல் கையிருப்பை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

நெல் சந்தைப்படுத்தல் சபையால் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அண்ணளவாக 115,000 மெற்றிக்தொன் நெல்லில், போதியளவு பாதுகாப்பு இருப்புத் தொகையைப் பேணிக் கொண்டு எஞ்சியவற்றை விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது அடுத்த பெரும்போகத்தில் நெல் கொள்வனவுக்குத் தேவையான களஞ்சிய வசதிகள் மற்றும் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக எடுக்கப்பட்ட முடிவாகும். முறையான விலைமனுக் கோரல் முறைமையைக் கடைப்பிடித்து இந்த நெல் இருப்பை விற்பனை செய்ய கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

## போதைப்பொருள் கடத்திய பிக்குகளின் மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 28

தாய்லாந்திலிருந்து 'குஷ்' மற்றும் 'ஹேஷ்' ஆகிய போதைப்பொருள்களை இலங்கைக்குக் கடத்திவந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 23 பிக்குகளை எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் சுபானி அபேசேகர உத்தரவிட்டுள்ளார். குறித்த பிக்குகள் நீர்கொழும்பு நீதவான் நீதி மன்றத்தில் இணையவழி முறைமையூடாக நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

## போதைப்பொருள் கடத்தல் பெரும்புள்ளி டுபாயில் கைது

கொழும்பு, மே 28

பெருமளவிலான போதைப் பொருள் கடத்தல்காரராகக் கருதப்படும் ஷிரான் பாசிக் என்பவர் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாய் பாதுகாப்புப் பிரிவினரால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஈரானிய போதைப்பொருள் வலையமைப்புடன் நேரடித் தொடர்புகளைக் கொண்டிருப்பதால், இவர் அமெரிக்காவுக்கும் தேடப்படும் ஒரு நபராக விளங்குகிறார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கைக்கு போதைப்பொருள்களை விநியோகிக்கும் 5 முக்கியமான பெரும் கடத்தல் காரர்களில் ஷிரான் பாசிக் என்பவரும் ஒருவர் எனக் கூறப்படுகிறது. (ச-இ)

## தங்கம் விலை சரிவு

யாழ்ப்பாணம், மே 28

இலங்கையில் தங்கத்தின் விலை நேற்று வீழ்ச்சியடைந்தது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தின நிலைவரப்படி, 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 389,000 ரூபாவாக விற்பனையாகி வந்த நிலையில், தற்பொழுது 3,000 ரூபாவால் குறைவடைந்துள்ளது. நேற்று 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 386,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதுடன், 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 355,200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (ச-இ)



## மயக்கமருந்து கொடுத்து 12 பவுண் நகை திருட்டு!

### ஓட்டோச் சாரதி கைது

கொழும்பு, மே 28

கொழும்பு மாளிகாவத்தை வீட்டுத் தொகுதியில் வசிக்கும் ஓய்வுபெற்ற பணியாளர் மற்றும் அவரது மனைவி ஆகியோரை மயக்கமடையச் செய்து, சுமார் 12 பவுண் தங்க நகைகளைத் திருடிச்சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் தெமட்டகொட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீடொன்றினுள் நுழைந்த பெண் ஒருவர் உட்பட நால்வரைக் கொண்ட குழுவொன்று இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏனைய சந்தேகநபர்கள் மற்றும் திருடப்பட்ட நகைகளை மீட்பதற்கான மேலதிக விசாரணைகளை தெமட்டகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

**நாளை** வெள்ளிக்கிழமை- வைகாசி 15

29.05.2026

சுபநேரம் : 05.52 – 07.22
ராகுகாலம் : 10.22 – 11.52


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாட்டின் கட்டுமானங்களில் 60 வீதமானவை சட்ட விரோதம்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தகவல்

**கொழும்பு, மே 28**

**இலங்கையில் தற்போது 60 சதவீதத்துக்கும் அதிகமான கட்டடக் கட்டுமானங்கள், உரிய அரச நிறுவனங்களின் அனுமதியோ அல்லது முறையான மண் பரிசோதனை ஆலோசனைகளோ இன்றி தன்னிச்சையாகவே அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடங்கள், முறையான திட்டமிடல் இல்லாததால் ஒரு குறுகிய கணப்பொழுதில் இயற்கை அனர்த்தங்களால் முற்றாக அழியக்கூடிய சாத்தியங்கள் அதிகம் உள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.**

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட அறிவியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் மிக முக்கியமாக நிலச்சரிவு அபாயம் உள்ள 6 மாவட்டங்கள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக இன்னும் 8 மாவட்டங்கள் என மொத்தம் 14 மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் அனர்த்த வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 20 வீதம் முதல் 30 வீதம் வரையான மக்கள் இந்த அபாயகரமான மலைப்பாங்கான பகுதிகளிலேயே வாழ்கின்றனர்.

புவியியல் ரீதியாக மனிதர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்குத் தகுதியான நிலங்கள் இலங்கையில் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளன. அதனைநாம்முறையாகமேலாண்மை செய்யவேண்டும். ஆனால், மக்கள் தங்களுக்குத் தோன்றிய ஆபத்தான இடங்களில் எல்லாம் வீடுகளைக் கட்டி வாழ்கின்றனர். இதற்கென ஒரு வழிமுறை உள்ளது. அந்த வழிமுறைக்கு மக்களைப் பழக்கப்படுத்த வேண்டும். அதன் பின்னர், மக்கள் அந்த வழிமுறையைப் பின்பற்றுகிறார்களா என்பதை நாம் கண்காணிப்புச் செய்யவேண்டும். ஏனெனில், எமது நாட்டில் கண்காணிப்பு என்பது பெரும்பாலும் நடப்பதில்லை. எனவே சுயமுடிவுகளைத் தவிர்த்து ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும். இதன்மூலம், தென் மேற்குப் பருவமழை போன்ற தீவிர இயற்கை அபாயகரமான சூழ்நிலைகளில் இருந்து எமது உயிர்களையும் உடைமைகளையும் பெருமளவில் பாதுகாத்துக்கொள்ளமுடியும் - என்றார். (ச-இ)

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 28

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்தத் தேர்த்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இரவு 7 மணிக்குக் கொடி இறக்கமும் 31ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் அன்று மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் முதலாம் திகதி மாலை 5.30 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெற்று ம.ஹோற்சவம் நிறைவுபெறும். (ச)

# புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்ப்பாணம், மே 28

வட்டு. மூளாய் றோட் ஐக்கிய நாணயச் சங்கத்தின் 93ஆவது வருடப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன.

இதன்போது புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக த.நாராயணன், உபதலைவராக சிவகுருநாதன் கனகசபாவதி, பொருளாளராக சி.கணேஸ்வரன், செயலாளராக ப. அருள்ராசன், நிர்வாக உறுப்பினராக சிவநேசன் சாந்தினி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ச)

# கோர விபத்தில் இருவர் பலி!

அம்பாறை, மே 28

அம்பாறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டிப்பர் - முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்கள் தடயந்தலாவ மற்றும் நவகம்புர பிரதேசங்களைச் சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடையவர்களாவர். விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, அம்பாறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது

சட்டவிரோதமான முறையில் 19 சீனப்பிரஜைகளின் கடவுச்சீட்டுகளைத் தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின்கீழும், அவற்றை விடுவிப்பதற்காகப் பல இலட்சம் ரூபா இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் கீழும் வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வேயங்கொட பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் இந்த விசேட கைது நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. அண்மையில் இராஜகிரிய பகுதியில் வைத்து ஒன்லைன் நிதி மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 19 சீனப் பிரஜைகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்ட சீனப் பிரஜைகளின் கடவுச்சீட்டுகளை வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனது கட்டுப்பாட்டின்கீழ் சட்டவிரோதமாக வைத்திருந்துள்ளார். பின்னர், அந்த 19 சீனர்களினதும் கடவுச்சீட்டுகளை மீண்டும் அவர்களிடம் ஒப்படைப்பதற்கு, நபர் ஒருவரிடமிருந்துதலா 3 இலட்சம் ரூபா வீதம் (மொத்தம் 5.7 மில்லியன் ரூபா ) இலஞ்சமாக வழங்கவேண்டும் என்று அவர் வற்புறுத்தியுள்ளார். இந்த இலஞ்சப் பணத்தைக் கோரும் பேரம்பேசலை பொலிஸ் பொறுப்பதிகாரி இடைத்தரகராகச் செயற்பட்டபெண்ஒருவர்மூலமாக சீனத் தரப்புடன் தொடர்பு கொண்டு முன்னெடுத்துள்ளார்என்பது முதற்கட்டவிசாரணைகளில் இருந்துதெரியவந்துள்ளது. இந்தச் சட்டவிரோதப் பணக் கோரிக்கை மற்றும் கடவுச்சீட்டு முடக்கம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினால் உரிய அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளைமுடுக்கி விட்ட மத்திய குற்றப் புலனாய்வுப் பணியகம், வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை வேயங்கொட பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்துக் கைதுசெய்துள்ளது. (ஏ-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும். தாய்மாமன்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்பது நல்லது. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டும். கணவன் –மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**கடகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. எதிர்பாராத பயணங்களால் உடல் அசதியும் மனச்சோர்வும் உண்டாகும். திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு நீங்கும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வருவது மகிழ்ச்சி தரும். சிலருக்கு அக்கம்பக்கத்தில் உள்ளவர்களால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு விஷயத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயின் உடல் ஆரோக்கியத்துக்காக செலவு செய்ய வேண்டி வரும்.

**மீனம்:** மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபை முக்கியத்துவம் 'ஜென் ஸி' யினருக்குத் தெரியாது



## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

**கொழும்பு, மே 28**

**'ஜென் ஸி' தலைமுறையினருக்கு மாகாணசபைத் தேர்தலின் முக்கியத்துவம் தெரியாது. அதனால் அவர்கள் பொறுப்பற்றவகையில் உள்ளார்கள் என முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

'பலா பபா அபிட எபா' என்று மக்கள் விடுதலை முன்னணியினரே குறிப்பிட்டு நாட்டில் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் சமூக மற்றும் அரசியல் வரலாற்றில் மாகாணசபைத் தேர்தல் பெரியதொரு திருப்புமுனை ஆகும். 'ஜென் சி' தலைமுறையினருக்கு மாகாணசபைத் தேர்தலின் முக்கியத்துவம் தெரியாது. அதனால் அவர்கள் பொறுப்பற்ற வகையில் உள்ளார்கள். 'பலா பபா அபிட எபா' என்று மக்கள் விடுதலை முன்னணியினரே குறிப்பிட்டு நாட்டில் வன் முறையைக் கட்டவிழ்த்துவிட்டார்கள்- என்றார். (எ-இ)

## ஹேமசிறி, பூஜித ஆகியோருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 28

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் அறிவித்துள்ளது.

முன்னதாகவே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும், ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதன் மூலம் கடமையை உதாசீனம் செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இவர்கள் இருவர் மீதும் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் நேற்றுப் புதன்கிழமை நீதிபதிகளான பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலகரத்ன பண்டார ஆகிய மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்டவர்களான முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தனர்.

இருதரப்பு வாதங்களை முன்வைப்பதற்காக இந்த வழக்குகளை மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி அழைப்பதற்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

## 10 இலட்சத்தை எட்டியது சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, மே 28

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 10 இலட்சம் சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது என்று வெளிவிவகார, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஓரளவுக்கு வீழ்ச்சி காணப்பட்டது. மத்திய கிழக்கில் நிலவும் மோதல் சூழல் மற்றும் உலகளாவிய பயண நிச்சயமற்ற தன்மைகளே இதற்கு முக்கியமான காரணம் எனத் துறைசார் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

2026ஆம் ஆண்டிலும் இலங்கைக்கு அதிக சுற்றுலாப்பயணிகளை அனுப்பும் நாடாக இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் வந்துள்ளனர். ஐக்கிய இராச்சியம், ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், இலங்கையை உலகின் முன்னணி சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்துத் துறைசார் பங்குதாரர்களுக்கும், எமது நாட்டைத் தேர்ந்தெடுத்த வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார்.

இலங்கையின் அந்நியச் செலாவணி ஈட்டும் முக்கியமான துறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை விளங்கும் நிலையில், வரும் மாதங்களிலும் இந்த வளர்ச்சி சீராகத் தொடரும் என அதிகாரிகள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (எ-இ)

## வெசாக் பண்டிகைக்காக இறைச்சிக்கடைகள் பூட்டு

கொழும்பு, மே 28

வெசாக் வாரத்தை முன்னிட்டு, ஜூன் 30, 31 மற்றும் முதலாம் திகதிகளில் நாடு முழுவதும் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகள், இறைச்சி வெட்டும் கூடங்கள், சூதாட்ட நிலையங்கள், கேளிக்கை விடுதிகள் ஆகியவற்றை மூடுமாறு அரச நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. (ச-இ)

## டொலர் மதிப்பில் சிறிய ஏற்றம்



கொழும்பு, மே 28

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வத் தரவுகளின்படி, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் நேற்றைய விற்பனை விலை 330.81 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. நேற்றுமுன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 328.69 ரூபாவாகக் காணப்பட்ட நிலையில், நேற்று அதன் மதிப்பில் சிறியளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. (எ-இ)

## ஓட்டோச் சாரதி விபத்தில் காயம்



வவுனியா, மே 28

வவுனியா ஓமந்தைப் பகுதியில் மாட்டுடன் மோதுண்டு கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டிச் சாரதி படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனச் சாரதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஏ-9 வீதியூடாக பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி, வீதியில் திடீரென குறுக்கே வந்த மாட்டுடன் மோதியதில் விபத்துக்குள்ளானது. அந்த வேளையில், கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி, எதிரே வந்த டிப்பர் வாகனத்துடனும் மோதியுள்ளது.

இந்த இரட்டை விபத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதமடைந்ததுடன், அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (எ-இ)

## பன்றித்தலைச்சி கண்ணகையில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 28

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில்குடமுழுக்கின் இறுதி நாள் 1008 சங்குமுழுக்கு நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் இரவு வைகாசி விசாகப் பொங்கல் நடைபெறும். அதே வேளை, கடந்த ஏப்ரல் 13 ஆம் திகதி ஆலயத்தின் மகா குடமுழுக்கு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## வியாழஹோமம்

யாழ்ப்பாணம், மே 28

குருபெயர்ச்சியை முன்னிட்டு பாணலிங்கேஸ்வரம் திருவருள்மிகு நர்மதாநதீஸ்வரர் சிவன் கோயிலில் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு வியாழஹோம் வழிபாடு இடம்பெறும். அடியவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும் நன்றி நவிலலும்

தோற்றம்
20 - 09 - 1946



மறைவு
28 - 04 - 2026


கடந்த 28.04.2026 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### அமரர் லோகநாயகி செல்வரத்தினம்

அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும் மற்றும் பல வழிகளில் எமக்கு ஆறுதல் கூறி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு மேலும் இன்று (28.05.2026) வியாழக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

(CS/31875) J-1

# வழுக்கையாற்றைப் பாதுகாக்கும் களப்பயணமும் உரையாடலும்!

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் வழுக்கையாற்றின் வழித்தடங்களிலுள்ள குளங்களை, நீர்த்தேக்கங்களைப் பாதுகாப்பதும், பொறுப்பாக மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர்வள ஆளுகையை நோக்கிச் செல்வதும் தொடர்பில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களையும் சேர்ந்த வட்டார உறுப்பினர்களையும் ஒருங்கிணைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் WASPAR செயற்றிட்டத்தின் நான்காவது கட்டமான களப்பயணமும் உரையாடலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்குட்பட்ட வறுத்தலைவிளான் குளத்தடியில் பேராசிரியர் சிறிஸ்கந்தராஜா தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமாகியது. இறுதியாக அராலிப் பாலத் தடுப்பணையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தங்கள் பல்வேறு அனுபவங்களையும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் பகிர்ந்துகொண்டனர். (ச-66)


## INVITATION FOR BID 2026_02
## OFFICE OF THE REGIONAL ASSISTANT COMMISSIONER OF LOCAL GOVERNMENT.

1. The Chairman, Regional Procurement Committee , on behalf of the Regional Assistant Commissioner , Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Construction work described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 if the estimated cost exceeds Rs.5 million,"
4. Qualification's requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding data & Contract Data (Section 5) for SBD 1 Documents.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 28/05/2026 To 10/06/2026 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application, for Construction of Mayelusiddy Road work – The Chairman, Point Pedro Pradeshiya Sabha , Puloly (T.P:0212263276, email:pointpedrops@gmail.com and
   for Re Construction of Sappachchimavadi Pillaiyar Road work - The Chairman, Chavakachcheri Urben Council, Urban Council Office Chavakachcheri (T.P:0212270806, email:chavauc@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee , Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna on or before 10:30:00 AM as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Office of the Regional Assistant Commissioner of Local Government , Sivan Pannai Road, Jaffna commencing at 10:30:00 AM as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 28/05/2026 To 10/06/2026 |
| | Pre-Bid Conference | At 10:30:00 AM on 08/06/2026 |
| | Closing and Opening of Bids | At 10:30:00 AM on 11/06/2026 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/PPDPS/2026/LAR/02 | Construction of Mayelusiddy Road at Point Pedro | 12.38 | 105 | C7 or above (Highway) | 3,500.00 | 124,000.00 | 30/07/2026 | 77Days |
| PSDG/NP/JAF/CUC/2026/LAR/02 | Reconstruction of Sappachchimavadi Pillaiyar Kovil Road at Chavakachcheri | 13.68 | 105 | C7 or above (Highway) | 3,500.00 | 137,000.00 | 30/07/2026 | 77Days |

Chairman
Regional Procurement Committee,
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna.
Date – 28.05.2026

(CR/47604) J-1




# முல்லை சாதனைப் பெண்களுக்கு அரியாத்தை விருது வழங்கிவைப்பு

முல்லைத்தீவு, மே 28

முல்லைத்தீவின் வீரப்பெண் மணி அரியாத்தையின் நினைவாக, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறைப் பெண் சாதனையாளர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை 'அரியாத்தை விருது' வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினால் பெண்களின் தலைமைத்துவம், தொழில்முனைவு, சமூக சேவை, மாற்றத்தை ஏற்படுத்தும் ஆற்றல் மற்றும் சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் 'அரியாத்தை விருது' ஆறு பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தொழில்முனைவில் வெற்றிகரமாக ஈடுபடும் 16 பேர் அரியாத்தை ஞாபகார்த்த பாராட்டுச்தல் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். மாவட்டச் செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்றார். (ச-19)


## யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**சகல அங்கத்தவர்களுக்கும் மீதியை உறுதிப்படுத்தல்**

மேற்படி சங்கத்தின் 01.01.2025 தொடக்கம் 31.12.2025 வரையான நிதியாண்டுக்குரிய கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் அங்கத்தவர் சேமம், அங்கத்தவர் கடன் புத்தகங்களை சமர்ப்பித்து சங்க ஏடுகளுடன் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- **இடம் :** யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
- **காலம் :** 01.06.2026 திங்கட்கிழமை, 02.06.2026 செவ்வாய்க்கிழமை
- **நேரம் :** முற்பகல் 9.30 - பிற்பகல் 2.00 மணிவரை


**இ.வேல்குமார்**
(கணக்காய்வாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)
**மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**
**28.05.2026**

(cr.47603) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்தியாவைக் குளிர்வித்து தப்பிக்கின்றது அரசாங்கம்

## விமல் தெரிவிப்பு



கொழும்பு,மே 28

இந்தியாவின் தேவைகளைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மிகவும் சிறப்பாக நிறைவேற்றிவருவதாலேயே மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் டெல்லியிடம் இருந்து அழுத்தம் வரவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் யாழில் வைத்து ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா வெளியிட்ட கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தலை இந்த அரசாங்கம் நடத்தாது. அவ்வாறு நடத்தினால் தோல்வி என்பது தெரியும். எனவே, தேர்தலை இழுத்தடிக்கும் நோக்கிலேயே மத்திய கிழக்குப் போர், டித்வா புயல் என்றெல்லாம் காரணங்கள் கூறப்பட்டுவருகின்றன.

இந்தியாவின் தலையீட்டுடன்தான் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. எனவே, இந்த விடயத்தில் இந்திய அழுத்தம் இருக்கக் கூடும். ஆனால் அவ்வாறு இல்லை என ஜே.வி.பி. செயலாளர் கூறுவதில் இந்தியாவின் ஏனைய திட்டங்களை இந்த அரசாங்கம் சிறப்பாக செயற்படுத்துகின்றது என அர்த்தமாகும்.

இந்தியா கூறும் அனைத்து விடயங்களும் நிறைவேற்றப்பட்டு வருவதாலேயே மாகாணசபைத் தேர்தல் பற்றி அந்த நாடு கவனத்தில் எடுக்கவில்லை - என்றார். (ச-இ)

அம்பிகை துணை



பச்சிலைப்பள்ளி, முகாவில், இயக்கச்சி,
அருள்மிகு திரியாய் அம்பாள் (பர்வதவர்த்தினி) தேவஸ்தான

திருக்குளிர்த்திப் பொங்கல் விழா
29.05.2026 வெள்ளிக்கிழமை

அம்பிகை மெய்யடியார்களே!

நிகழும் பராபவ வருடம் வைகாசித் திங்கள் 15ஆம் நாள் 29.05.2026 வெள்ளிக் கிழமை இயக்கச்சி. முகாவில்,திரியாய் அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்திப் பொங்கல் விழா இடம்பெறும். அன்று பகல். இரவு தொடர்ந்து விசேட அபிசேக ஆராதனைகளும் காவடி. பால்ச்செம்பு. தீச்சட்டி. கரகம். பறவைக்காவடிகள் போன்ற நேர்த்திக்கடன் நிறைவேற்றல்களும் தொடர்ந்து நீராகாரமும். மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

பூசை நேரம்- வெள்ளிக்கிழமை (29.05.2026) மதியம் 1.00 மணிக்கு பூஜையும், (30.05.2026) சனிக்கிழமை காலை 05.00 மணிக்கு வழிவெட்டு பூசையும் அதனை தொடர்ந்து பொதுக்கூட்டமும், நிர்வாக தெரிவும் இடம்பெறும்

குறிப்பு :-

- அன்றைய நாள் பாதுகாப்பு. முதலுதவி. சுகாதாரம் பேணல். குடிநீர் வசதி போன்றவைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் திருப்திகரமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- நீர். குடிநீர் வசதி போன்றவைகள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினரால் திருப்திகரமாக ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.
- விசேட போக்குவரத்து ஒழுங்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி தனியார் போக்குவரத்து சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தமது பதிவுகளை 28.05.2026 வியாழக்கிழமை காலை 03.00 மணிக்கு முன்பதாக மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 555 2123, 077 347 4011, 077 494 4490

- ஆலயத்தின் வளர்ச்சிகருதி அர்ச்சனைப் பொருட்கள் ஆலய பரிபாலன சபையினரால் விற்பனை செய்யப்படும்.
- எந்தவொரு தனிநபரும் கற்பூரம். ஊதுபத்தி போன்றவை ஆலய வளாகத்தினுள் விற்பனை செய்ய முடியாது. (மீறி விற்பனை செய்தால் பொருட்கள் பறிமுதல் செய்யப்படும்.)
- உணவுப் பண்டங்களை விற்பனை செய்வோர் சுகாதார பணிமனையில் அனுமதி பெற்று வருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஒலி பெருக்கி உபயம்:- மு.தங்கவேல் குடும்பம் (உடுத்துறை வடக்கு)

கணபதி ஒளி அமைப்பு உபயம்:- க.இளையதம்பி குடும்பம் (வேம்படி உடுத்துறை வடக்கு)

- இவ்விழாவிற்கு பல வழிகளிலும் உதவி செய்யும் பிரதேச செலகத்தினருக்கும். பிரதேச சபையினருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

வழமை போன்று பொங்கல் விழா இரவு பகலாக நடைபெறும்.

முகாவில், இயக்கச்சி, (CS/30434) J-1 -ஆலய பரிபாலன சபை.

65வது அகவை நாள் வாழ்த்துக்கள்

"தோன்றின் புகழொடு தோன்றுக"



இன்று தமது 65வது அகவையில்
காலடி பதிக்கும் எனது மைத்துனன்
செஞ்சொற் செல்வர்
கலாநிதி
ஆறு. திருமுருகன்
அவர்களுக்கு இனிய அகவைநாள்
நல் வாழ்த்துக்கள் கூறி
மகிழ்கின்றோம்.
இந் இனிய நாளில்
நல்ல ஆரோக்கியத்துடனும்,
மகிழ்ச்சியுடனும், நீண்ட ஆயுளோடு
பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

HAPPY Birthday

"அக்கா அகம்"
சிந்துஜன் ஒழுங்கை,
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

மைத்துனன் குடும்பத்தினர்
பேரமார் - க.சஸ்விகா,
க.விதுன்

(CS/31877) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
25 . 06 . 1947



அம்பாள் அடியில்
27 . 05 . 2026

### திருமதி சிவானந்தம் நாகலட்சுமி

சிறுவிளான் இளவாலையை பிறப்பிடமாகவும், உவர்மலை திருகோணமலை, சிறுவிளான் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவானந்தம் நாகலட்சுமி அவர்கள் நேற்று (27.05.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான ஐயாத்துரை - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், அமரர் சிவானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், வாகீசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், நீரியல் ஆய்வு மையம் தொண்டமானாறு, துணை நிறுவுநர் Oh!ride) அவர்களின் அன்புத் தாயாரும், நாகராசா, ஜெயலட்சுமி, ஜெயராசா (அமரர்), சௌந்தரராசா, புஸ்பராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகீர்ணா (ஆசிரியை வ/மூன்றுமுறிப்பு அ.த.க. பாடசாலை, வவுனியா) அவர்களின் அன்பு மாமியாரும், அதிக்ஷ்சன், ரிதம்ஸ்வீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
(சகோதரர்) ஐ.புஸ்பராசா,
(மகன்) சி.வாகீசன்
077 4353788
077 1289316

சிறுவிளான்,
இளவாலை.

(CS 31885)A

## மரண அறிவித்தல்

மலர்வு
24 . 04 . 1951



உதிர்வு
25 . 05 . 2026

### யோசப் அன்ரன் மேரி லிற்வின் (மலர்)

மயிலிட்டி காணிக்கை மாதா கோவிலடியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் அன்ரன் மேரி லிற்வின் (மலர்) அவர்கள் 25.05.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற இம்மானுவேல் இராக்கினி தம்பதியரின் அன்பு மகளும், காலம்சென்ற அன்ரன், யோகா, ஜெயா மற்றும் யமுனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மடோனா, விஜியா, ஜெயந்திமாலா, குமார், மனோகரன், லலிதா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், நிஷாந்தன், நிஷாந்தினி (கொலன்ட்), நிருஷன் (சுவிஸ்), நிதர்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவமலர், ஜெயக்குமார் (கொலன்ட்), றெஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருஜா, நிருபன், ஜெருஷ்கா, ஜோன்ஸ், ஜெனோஷா, நேகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (29.05.2026) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அன்னாரின் பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்.

(CS 31881)A

## மரண அறிவித்தல்



### சுப்பன் பார்த்தீபன்

(முன்னாள் தலைவர் - சரஸ்வதி சனசமூக நிலையம்)

மண்ணில் 10.01.1964 — விண்ணில் 21.05.2026

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பன் பார்த்தீபன் அவர்கள் கடந்த 21.05.2026 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பன் - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், மற்றும் பொன்னன் காலஞ்சென்ற குணம் இணையரின் மருமகனும், இராஜவதனாவின் பாசமிகு கணவரும், அனிஸ்ரன் (சுவிஸ்), பரிஸ்ரா (இந்தியா), யசீரா (வவுனியா), சோபின், பகீன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும், கலைமதி (அவுஸ்திரேலியா), கிருபாகரன் (சுரேஸ் - அவுஸ்திரேலியா), மனோகரன் (மனோ- கொலன்ட்), சிவநாயகி (கனடா), அமரர் சித்திரா தேவி, லோகிதாஸ் (சுவிஸ்), ஜெயதாஸ் (கனடா), தயானி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டிலானி (சுவிஸ்), அருண் (சுவிஸ்), அகிலேஸ்வரன் (வவுனியா), ரஜிலா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.05.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கைதடி மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரியான் ஐவினைப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 31884) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பலாலி...

வலி.வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, இராணுவப் பிரதானிகள், அரச உயர்மட்ட அதிகாரிகள், ஆளுநர் உள்ளிட்ட தரப்பினர் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள். இதன்போதே, பலாலி கிழக்கை விடுவிக்க வேண்டும் என்று அரச தரப்பால் விடுக்கப்பட்ட கோரிக்கையை இராணுவம் திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

நீண்டகாலமாக இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பலாலி கிழக்கு (ஜே/245, 252, 253, 254) பகுதிகளைச் சேர்ந்த 550 ஏக்கர் காணிகளை விரைவில் விடுவிக்க வேண்டும் என்று பொதுமக்கள் தொடர்சியாகக் கோரிவந்தனர். அந்தக் காணிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என்றே அரச தரப்பினரும் கூறிவந்தனர். இவ்வாறான நிலையிலேயே, விமான நிலைய விஸ்தரிப்புப் பணிகளைக் காரணமாகக்கூறி அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு இராணுவம் மறுத்துள்ளது.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் சந்திரசேகர், 'தன்னிச்சையான முறையில் அவ்வாறான சுவீகரிப்பை மேற்கொள்ள முடியாது. இது தொடர்பில் நாங்கள் உரையாடுவோம்' என்று கூறியுள்ளார். இதன்போதும், பல்வேறு காரணங்களைக்கூறி காணிகளை விடுவிப்பதற்கு இராணுவம் மறுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பொய்களை...

வலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காணிவிடுவிப்புக் கலந்துரையாடல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று மேலும் தெரிவித்தாவது:-

காணி விடுவிப்புத் தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் பாதுகாப்புப் பிரதி அமைச்சரின் பங்கேற்புடன் நேற்று உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. அதில் இராணுவத் தரப்பினர் காணி விடுவிப்புத் தொடர்பில் எந்தவொரு சாதகமான பதிலையும் தெரிவிக்காமலேயே கூட்டம் நிறைவடைந்துள்ளது. ஆனால், மூடிய அறைக்குள் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சந்திரசேகர் பல விடயங்களில் சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன என்றும், விரைவில் தீர்வு காணப்படும் எனவும் கூறியுள்ளார். இந்த அப்பட்டமான பொய்யை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய பொய்களை மக்கள் மத்தியில் விதைப்பதற்காகத்தான் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பிரதேசசபைகளின் தவிசாளர்களையும் திட்டமிட்டுப் புறக்கணிக்கும் வகையில் செயற்படுகின்றனர். வலி.வடக்குத் தொடர்பில் பேசுவதற்கு வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளரை கட்டாயம் அழைத்திருக்க வேண்டும். இது மூடிய அறைக்குள் இடம்பெற்றிருக்க வேண்டிய கலந்துரையாடல் அல்ல-என்றார். (அ-ம-26)

## நீதிபதி....

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதியாக கடந்த ஒரு மாதத்துக்கு முன்னரேயே நீதிபதி அலெக்ஸ்ராஜா நியமனம் பெற்றிருந்தார். மூன்று வருடங்களுக்குச் செல்லுபடியாகும் வகையில் இந்த நியமனம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில் அவருக்குத் திடீரென இடமாற்றம் வழங்கப்பட்டமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. வடமாகாண ஆளுநரால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுக்களுக்கு நீதிபதி அலெக்ஸ்ராஜா அண்மையில் தடை விதித்திருந்தார். இந்தத் தீர்ப்பு நீதித்துறை வட்டாரத்தில் பெரியளவில் பேசப்பட்டது. இவ்வாறான பின்னணியிலேயே நீதிபதி அலெக்ஸ்ராஜாவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## யாழ்ப்பாணம்...

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதியாக எஸ்.சதீஸ்தரன் நேற்றுப் புதன்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதித்துறைச் சேவையில் விசேடதர அதிகாரியான சதீஸ்தரன் இந்த மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் இலங்கையின் புதிய மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். இவ்வாறான நிலையிலேயே யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதியாக அவர் நியமனம் பெற்றுள்ளார். யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் மற்றும் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதியாகவும் கடமையாற்றிய இவர், நீதித்துறையில் நீண்டகால அனுபவம் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## 40 மோட்டார்....

பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக விசேட சட்ட அமுலாக்க நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். இதன்போதே, போக்குவரத்து விதிமீறலில் ஈடுபட்டவர்களிடம் இருந்து 40 மோட்டார்சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைக்குப் பின்னர் அந்த மோட்டார்சைக்கிள்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-55)

## பச்சிளம்...

உறக்கத்துக்குச் சென்ற அந்தச் சிசு அதிகாலை 3.30 மணியளவில் அசைவற்றுக் கிடந்ததை அவதானித்த குடும்பத்தினர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். இதன்போது பரிசோதனைகளை முன்னெடுத்த மருத்துவர்கள் அந்தச் சிசு ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். சிசுவின் இறப்புக்கான காரணம் தெரியவராத நிலையில், மாதிரிகளை கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-66)

## சிறுமியை...

கடந்த 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி 14 வயதுக்கு உட்பட்ட சிறுமியை நபரொருவர் வன்புணர்வு செய்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்து அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர். அவருக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகள் நிறைவடைந்த நிலையில், கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி கருணாகரன் முன்னிலையில் வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, குறித்த நபரைக் குற்றவாளியாக அறிவித்த நீதிமன்றம் அவருக்கு 12 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து நடவடிக்கை எடுத்தது. அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-55)

## குருநகர்...

குருநகர் சென்.பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த வேலு உதயகுமார் என்ற மீனவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலையில் உடற்கூற்று பரிசோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-23)

## விஞ்ஞானபீட....

தற்போதைய பீடாதிபதி பேராசிரியர் ரவிராஜனின் பதவிக்காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. இதனால் புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான பீடச் சபைக் கூட்டம் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே கலாநிதி கதிரவேலு தபோதரன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். ஜூன் மாதம் முதலாம் திகதிமுதல் இந்த நியமனம் நடைமுறைக்கு வரவுள்ளது. (அ-ம-20-66)

## ரணில்...

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நாடாளுமன்றம் வரவுள்ளார், தேசிய அரசமையவுள்ளது என்றெல்லாம் தகவல் வெளியாகின்றது. என்னைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அரசியலுக்கு வரமாட்டார். எனவே, அவர் தொடர்பில் உறுதிப்படுத்தப்படாத தகவல்களைத் தெரிவிப்பதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் கட்சி தாவுவதை தடுக்கும் சட்டமூலத்தை நான் வரவேற்கின்றேன்-என்றார். (அ-ம-இ-26)

# முப்படையின் பலம் நாட்டுக்கு அவசியம்

### பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, மே 28

பாதுகாப்பு விடயத்தில் தளர்வுகளை மேற்கொள்ளக்கூடாது. இராணுவம் வலுப்படுத்த வேண்டுமே தவிர, படை குறைப்புச் செய்வது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது நாடு மூன்று தடவைகள் ஆயுதக் கிளர்ச்சியைச் சந்தித்த நாடாகும். அதேபோல வெளியக அழுத்தங்களும் வரக்கூடும். எனவே, பாதுகாப்பு விடயத்தில் தளர்வுகளை மேற்கொள்ளக்கூடாது. முப்படைகள் பலமாக இருக்க வேண்டும். புலனாய்வு அமைப்புகள் வலுவாகவே இருக்கவேண்டும்.

நாம் போரை முடிக்கும்போது வலுவான இராணுவம் இருந்தது. தற்போது அதில் 20 சதவீதமானோர் தற்போது எஞ்சியிருக்கலாம். ஏனையோர் ஓய்வு பெற்றிருக்கலாம். போர் ஏற்பட்ட பிறகு கட்டியெழுப்புவது அல்ல இராணுவக் கட்டமைப்பு. போர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் இராணுவம் வலுவாகவே இருக்கவேண்டும். படைக் குறைப்புப் பற்றி பேசப்படுகின்றது. அது ஏற்புடைய விடயம் அல்ல. முப்படைகள் பலமாகவே இருக்கவேண்டும்.

சிங்கப்பூர் சிறிய நாடாக இருந்தாலும் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கே அதிக நிதி ஒதுக்கப்படுகின்றது- என்றார். (ச-44)

# விஜித ஹேரத்துக்கு பாரம்பரிய வரவேற்பு

கொழும்பு, மே 28

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நியூசிலாந்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், அந்த நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் வர்த்தக அமைச்சின் வளாகத்தில் பாரம்பரிய வரவேற்பு நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பாரம்பரிய வரவேற்பு நிகழ்வின் மூலம் கௌரவிக்கப்பட்டதை பெரும்பேறாகக் கருதுவதாக அமைச்சர் அவரது எக்ஸ்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் 3ஆம் திகதி வரை அமைச்சர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி.எல். தொடரிலிருந்து

# வெளியேற்றப்பட்டது ஹைதராபாத் அணி!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற எலிமினேட்டர் ஆட்டத்தில் ஹைதராபாத் அணியை வீழ்த்தி தொடரில் இருந்து வெளியேற்றியது ராஜஸ்தான்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சூரியவன்ஸி 97 ஓட்டங்களையும், ஜுரல் 50 ஓட்டங்களையும் பெற்றனர். சூரியவன்சி வெறும் 28 பந்துகளிலேயே 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஐ.பி.எல். தொடரில் குறைந்த பந்துகளில் சதம் கடந்தவர் (30 பந்துகளில்) என்ற கெய்லின் சாதனையை முறியடிப்பதற்கு சூரியவன்ஸிக்கு சிறந்த வாய்ப்புக் கிடைத்தது. எனினும் அவர் 29ஆவது பந்தில் ஆட்டமிழந்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஹைதராபாத் அணி ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆரம்பவீரரான அபிஷேக் சர்மாவை இழந்தது. ஹெட் 17 ஓட்டங்களுடனும், சமரன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்க ராஜஸ்தானின் வெற்றி உறுதியானது. இஷான் கிஷான், நிதிஸ்குமார் ரெட்டி, அரோரா உள்ளிட்ட வீரர்கள் அவ்வப்போது முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவர்களால் இலக்கை எட்ட முடியவில்லை. முடிவில் 196 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தொடரில் இருந்து வெளியேறியது ஹைதராபாத் அணி.

நாளை நடைபெறவுள்ள இரண்டாவது தகுதியாட்டத்தில் குஜராத் ராஜஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் மோதும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## மட்டக்களப்பில் தீ குழந்தைகள் பலி

மட்டக்களப்பு, மே 28

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியார் விடுதியில் ஏற்பட்ட தீவிபத்தைத் தொடர்ந்து இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். தீவிபத்துக்கான காரணம் தொடர்பில் கண்டறியப்படாத நிலையில் அது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. புகையைச் சுவாசித்ததால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாகவே இறப்புச் சம்பவித்ததாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (ம)


## கடை விற்பனைக்கு

ஐந்து சந்திக்கு அண்மையாக நாவலர் வீதியோரமாக 10 அடி அகலமும், 35 அடி நீளமும் உள்ள தண்ணீர் வசதி, Bathroom வசதிகளுடன் கூடிய கடை விற்பனைக்கு உண்டு.
விலை - 16, 500,000/-
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 077 221 6683
(S/31880)J-1

## 2 அறைகள் வாடகைக்கு

அறைகள் வாடகைக்கு. சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் சகல வசதிகளை கொண்ட 2 அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
021 222 2029, 076 665 9934, 077 562 0667
(CS/61527) J-1

## காணி விற்பனைக்கு

யாழ் அச்சுவேலி நவக்கிரியில் 3 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு.

* அச்சுவேலியிலிருந்து நிலாவரை செல்லும் பிரதான வீதிக்கு அருகாமையில்
* ஒன்றரை (1 1/2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 15 அடி பாதையுடன்
* சுன்னாகத்திலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதி 200m தூரம்
* அச்சுவேலி நகரம் 2km
* பருத்தித்துறை வீதி 1km தூரம் (புத்தூர் சந்தி)
* நிலாவரை கிணறு 700m தூரம்
* செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
* ஒரு பரப்பின் விலை 18 இலட்சம் மட்டும் (1800000/=)

தொடர்புகளுக்கு:
077 2880 152, 076 7390 413
(CS 31876) J-1


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22.02.1939 | 27.05.2026 |

### வேலுப்பிள்ளை சிவராசா
(ஓய்வுபெற்ற அதிபர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவராசா (ஓய்வு பெற்ற அதிபர், கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம் மற்றும் முன்னாள் தலைவர், இலங்கை ஆசிரியர் சங்கம் - வடமாகாணம்) நேற்று (27.05.2026) காலமாகிவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசம்மா தம்பதியினரின் மருமகனும் செல்வநாயகியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கலையரசி (Canada), எழிலரசி (SSDT RDHS Office - Kilinochchi), அன்பரசி (MSO - சுதேச மருத்துவ திணைக்களம் - வடக்கு மாகாணம்) ஆகியோரின் தகப்பனாரும் தேசிகநாதன், ஸ்ரீதத்தாத்திரேயநேசன் (செயலாளர் - Yuthies Designers Pvt Ltd), பிரதிபன் (நிர்வாக உத்தியோகத்தர் - வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சண்முகசுந்தரம் பரமேஸ்வரி அம்மா மற்றும் தேவாமிர்தம், காலஞ்சென்றவர்களான ஜெயராணி, ஜெயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யுவேதா ( உரிமையாளர் - Yuthies Designers Pvt Ltd.), சரண்யா (Canada), திவ்யநேசன் (Faculty of Agriculture - University of Jaffna), மானசி (SLIIT -Malabe), சாருஜன் (Canada) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மதியம் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

27, துர்க்கையம்மன் கோவிலடி,
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31882) A



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media